நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் பற்றிய அறிக்கை

குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் காலாண்டு 4 மற்றும் 2026இன் காலாண்டு 1

இலங்கை மத்திய வங்கி

2026 மே

2025இன் நான்காம் மற்றும் 2026இன் முதலாம் காலாண்டுகளில், காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது தொடர்ச்சியான இரண்டு காலாண்டுகளிற்கு, நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணவீக்க இலக்கிற்குக் கீழாக இரண்டு சதவீதப் புள்ளிகளை விட அதிகமாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையினால், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவினைப் பூர்த்திசெய்யும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையினால் கௌரவ. நிதி அமைச்சர் ஊடாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை.

-இந்த பக்கம் வெறுமையாக விடப்பட்டுள்ளது-

நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் பற்றிய அறிக்கை

குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் காலாண்டு 4 மற்றும் 2026இன் காலாண்டு 1

இலங்கை மத்திய வங்கி | 2026 மே

---

1. அறிமுகம்

1.1. 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் மத்திய வங்கிச் சட்டமெனக் குறித்துரைக்கப்படும்) 26(1)ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதியமைச்சருக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையில் 2023 ஒத்தோபர் 03ஆம்[1] நாளன்று கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை[2] 5 சதவீத மட்டமொன்றில் பேணுவதற்கு மத்திய வங்கிக்கு ஆணையளிக்கின்றது. மேலும், மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவானது மத்திய வங்கி நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பணவீக்க இலக்கினைக் குறித்துரைக்கப்பட்ட இடைவெளியொன்றினுள் தொடர்ச்சியான இரண்டு காலாண்டுகளில் பூர்த்திசெய்யத் தவறினால் பணவீக்க இலக்கினை எய்தத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள், மற்றும் பணவீக்க இலக்கு எக்காலவரையறையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலவரையறையின் ஒரு மதிப்பீடு என்பவற்றினைக் குறித்துக்காட்டி மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது கௌரவ நிதியமைச்சரினூடாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், அது பொதுமக்களுக்கும் கிடைப்பனவாக இருத்தல் வேண்டும். மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(5)இன் நோக்கத்தினை அடையும் பொருட்டு நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையானது இடைவெளியினை ±2 சதவீத புள்ளிகளெனக் குறித்துரைக்கின்றது.

1.2. அடையப்பட்ட தரவுகளின் அடிப்படையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கத்தின் காலாண்டுச்

---

[1] 2023 ஒத்தோபர் 05ஆம் திகதியிடப்பட்ட 2352/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

[2] காலாண்டு முதன்மைப் பணவீக்க வீதமானது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாதங்களுக்கான மாதாந்த முதன்மை கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலுள்ள ஆண்டுக்கு ஆண்டு சதவீத மாற்றங்களின் சாதாரண சராசரியினைக் குறிக்கின்றது.

சராசரி 2025இன் நான்காம் மற்றும் 2026இன் முதலாம் காலாண்டுகளில் முறையே 2.1 சதவீதமாகவும் 2.0 சதவீதமாகவும் காணப்பட்டது.[3] தொடர்ச்சியாக இரு காலாண்டுகளுக்கு 5 சதவீத இலக்கிற்குக் கீழ் 2 சதவீதப் புள்ளிகளை விட குறைவாக (அதாவது 3.0 சதவீதத்திற்குக் கீழ்) பணவீக்கம் காணப்பட்டமையினால் மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5)ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. 2024இன் இறுதி மூன்று காலாண்டுப் பகுதியிலும் 2025இன் அனைத்து நான்கு காலாண்டுப் பகுதிகளிலும் காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது இலக்கிற்கு கீழே காணப்பட்டமையினால், 2024 திசெம்பரிலும், 2025 மாச்சிலும், யூனிலும், ஓகத்திலும் மற்றும் திசெம்பரிலும், மற்றும் 2026 மாச்சிலும் இதையொத்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.[4] இதற்கமைய, காலாண்டு முதன்மைப் பணவீக்கம் 2026இன் முதலாம் காலாண்டில் இலக்கிற்குக் கீழ் தொடர்ந்தும் காணப்பட்டமையினால், கடந்த காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு பின்தொடர் அறிக்கையாக இது சமர்ப்பிக்கப்படுகின்றது.

1.3. அடிப்படைக் கேள்வியினால் தூண்டப்பட்ட விலை அழுத்தங்கள் படிப்படியாக மாத்திரமே மீட்சியடைந்த அதேவேளை, பிரதானமாக கணிசமானளவு நிரம்பல் பக்க பணவீக்க வீழ்ச்சி அதிர்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றமையின் காரணமாக, 2024இன் இரண்டாம் காலாண்டு முதல், காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2 சதவீதப் புள்ளிகளுக்கு கீழாக (அதாவது 3.0 சதவீதத்திற்குக் கீழ்) தொடர்ச்சியாக காணப்பட்டது. உள்நாட்டு எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பவற்றின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட குறைப்புகளுடன் இணைந்து, 2024 மாச்சிலும் யூலையிலும் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் பாரியளவில் மின்சார கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய திருத்தங்களால் 2024இன் தொடக்கத்திலிருந்து நடுக்காலப்பகுதி வரையிலான பணவீக்க வீழ்ச்சி பிரதானமாக தூண்டப்பட்டு, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வலு மற்றும் போக்குவரத்து கூறுகளின் விலைகளை குறிப்பிடத்தக்களவு குறைவடையசெய்தது. இந்தப் பணவீக்க வீழ்ச்சி தாக்கமானது இறக்குமதிச் செலவுகளையும் பரந்தளவிலான இறக்குமதிகளால் ஏற்பட்ட பணவீக்கத்தையும் குறைவடையசெய்த 2024 காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் உயர்வினாலும், அத்துடன் ஆண்டு காலப்பகுதியில் உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட மிதமடைதலினாலும் மேலும் மீளவலுப்படுத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து, தாழ்ந்தளவிலான வலுவுடன் தொடர்புடைய விலைகளின் தொடர்ச்சியும் 2024இன் முற்பகுதியில் பெறுமதிசேர் வரியுடன் தொடர்புடைய விலை அதிகரிப்புடன் தொடர்புபட்ட

[3] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம், மத்திய கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் யுத்தத்திலிருந்தான கசிவுத்தாக்கங்களை, குறிப்பாக உள்நாட்டு வலு விலைகளில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய சீராக்கங்களை பிரதிபலித்து, 2026 ஏப்பிறலில் 5.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.

[4] பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கம் விலகியமை மீதான முன்னைய அறிக்கைகள் https://www.cbsl.gov.lk/ta/நாணயக்-கொள்கை/நாணயக்-கொள்கை-தொடர்பூட்டல்/பாராளுமன்றத்திற்கு-பொறுப்புக்கூறல் என்ற இணைப்பில் கிடைக்கப்பெறுகின்றன.

சாதகமான புள்ளிவிபரத் தளத்தாக்கமும் 2024இன் பிற்பகுதியிலும் 2025இன் முற்பகுதியிலும் அவதானிக்கப்பட்ட பணச்சுருக்க நிலைமைகளின் தீவிரமடையும்தன்மைக்கு பங்களித்தன. இதனடிப்படையில், அண்மைய பணச்சுருக்க போக்கில் காலாண்டுப் பணவீக்கத்தின் தீவிரமான நிலையானது 2025இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்டது. அதன் பின்னர், முன்னைய விலைக் குறைப்புகளின் தாக்கங்கள் படிப்படியாக குறைவடைந்ததன் காரணமாக முதன்மைப் பணச்சுருக்கமானது படிப்படியாக தளர்வடைந்து மீண்டும் நேர்க்கணியப் புலத்திற்குத் திரும்பலடைந்தது. இந்தப் பாதையானது, 2025 யூனில் மின்சார கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தத்தினாலும் உள்நாட்டுக் கேள்வியின் படிப்படியான மீட்சியுடன் இணைந்து சில உணவுப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் ஆதரவளிக்கப்பட்டன. எவ்வாறிருப்பினும், மையப் பணவீக்கம் தொடர்ந்தும் மிதமான அடிப்படைக் கேள்வி அழுத்தங்களைச் சுட்டிக்காட்டியதுடன், பணவீக்கத்தின் இந்த மீட்சியின் வேகம் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மெதுவாக காணப்பட்டமையானது, 2026இன் முதலாம் காலாண்டு வரை காலாண்டு முதன்மைப் பணவீக்கம் இலக்கினை விட தொடர்ச்சியாக தாழ்ந்தளவில் காணப்படுவதற்கு வழிவகுத்தது.

1.4. மேலே எடுத்துக்காட்டப்பட்ட பின்னணியில், குறிப்பாக 2025இன் நான்காவது காலாண்டினையும் 2026இன் முதலாம் காலாண்டினையும் கருத்திற்கொள்கையில், முதன்மைப் பணவீக்கமானது தாழ்வான நேர்க்கணிய மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டது. இரு காலாண்டுகளிலும், பணவீக்கம் 3 சதவீதத்திற்கு கீழேயே காணப்பட்டு, இதன்மூலம் இலக்கிலிருந்து கீழ்நோக்கிய விலகலொன்றைப் பதிவுசெய்தது. டித்வா புயலுடன் தொடர்புடைய இடையூறுகள் 2025இன் நான்காவது காலாண்டுப் பகுதியில் பணவீக்கம் மீதான வரையறுக்கப்பட்ட தாக்கத்தைக் கொண்டிருந்தது. எனினும் மத்திய கிழக்கில் இடம்பெற்றுவருகின்ற யுத்தமானது 2026இன் முதலாம் காலாண்டின் பிற்பகுதியிலிருந்து பணவீக்கத்தைப் பாதிப்பிற்குட்படுத்தியுள்ளது. பிரதானமாக மத்திய கிழக்குப் போரிலிருந்து தோன்றிய உயர்ந்தளவிலான வலு விலைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து, அடையப்பட்ட ஆண்டிற்காண்டு பணவீக்கம் 2026 மாச்சில் 2.2 சதவீதத்திலிருந்து 2026 ஏப்பிறலில் 5.4 சதவீதமாக அதிகரித்தது. காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2026இன் இரண்டாம் காலாண்டில் பணவீக்க இலக்கினை அடையுமெனவும், பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, நடுத்தரக் காலத்தில் அவ்விலக்கினை அண்மித்து உறுதியடையும் எனவும் 2026 மாச்சு மாத நாணயக் கொள்கைச் சுற்றில் வெளியிடப்பட்ட எறிவுகள் சுட்டிக்காட்டின. மத்திய கிழக்கில் நிலவுகின்ற யுத்தத்தின் நிலையற்றதன்மை அத்துடன் அதன் உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை மீதான பரந்த வீச்சிலான கசிவுத்தாக்கங்கள் போன்றவற்றுக்கு மத்தியில், தற்போதைய பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடானது உயர்ந்தளவிலான நிச்சயமற்றதன்மைக்குட்பட்டதாக காணப்படுகின்றது. அடிப்படை நிலைமைகளிலிருந்தான ஏதேனும் கணிசமானளவு மாற்றங்கள் இந்த எறிவுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு விலகல்களுக்கு வழிவகுக்கக்கூடும்.

2. பணவீக்க இலக்கிலிருந்து விலகியமைக்கான காரணங்கள்

கூட்டுக் கேள்வியின் படிப்படியான மீட்சியொன்றிற்கு மத்தியில், அண்மைய காலப்பகுதியில் நிரம்பல் பக்கக் காரணிகள் பணவீக்கத்தின் மீது அதிகம் செல்வாக்குச்செலுத்தின. முன்னைய அறிக்கைகளில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, 2024இன் இறுதி மூன்று காலாண்டுப் பகுதியிலும் 2025இன் அனைத்து நான்கு காலாண்டுப் பகுதிகளிலும் பணவீக்கப் பாதை பெரும்பாலும் மின்சார கட்டணங்கள், எரிபொருள் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு என்பவற்றின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் அதேபோன்று உணவுப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களாலும் தூண்டப்பட்டிருந்தது. இத்தகைய அசைவுகளுக்கு உலகளாவிய எண்ணெய் விலைகள் ஒப்பீட்டளவில் குறைவாகவிருந்த காலப்பகுதி ஆதரவளித்ததுடன் சில குறிப்பிட்ட காலப்பகுதியில் சாதகமான வானிலை போக்குகள், நீர்மின்வலு உருவாக்கத்தின் ஒப்பீட்டளவில் அதிகளவிலான பங்கொன்றிற்கு ஆதரவளித்தமையும் உதவின. செலாவணி வீதத்தின் அசைவுகளும், பிரதானமாக இறக்குமதி விலைகள் மற்றும் உள்நாட்டுச் செலவு நிலைமைகள் என்பவற்றின் மீதான தாக்கத்தினூடாக, பணவீக்க இயக்கவாற்றலை வடிவமைப்பதில் பங்காற்றின. எதிர்பார்க்கப்பட்ட சில விலைச் சீராக்கங்களை குறிப்பாக மின்சார கட்டணங்கள் போன்றவற்றை, விலையிடலிலும் காலநேரத்திலும் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் காரணமாக துல்லியமாக முன்னறிவிப்பது சவாலானதாக இருந்து வருகின்றது. எறிவுகளில் உள்வாங்கப்பட்ட ஊகங்களிலிருந்து அடையப்பட்ட கட்டணச் சீராக்கங்களில் ஏற்பட்ட விலகலானது அடையப்பட்ட பணவீக்கம் எறிவுகளிலிருந்து[5] விலகுவதற்குப் பகுதியளவில் பங்களித்துள்ளது. முன்னைய அறிக்கைகளில் இக்காரணிகள் எடுத்துரைக்கப்பட்டமையால், தற்போதைய அறிக்கை 2026இன் முதலாம் காலாண்டுப்பகுதியில் இலக்கிலிருந்து தொடர்ச்சியான விலகல் மீது கவனம்செலுத்துகின்றது.

2.1. எதிர்பார்க்கப்பட்டவாறு, பணவீக்கம் 2026இன் முதலாம் காலாண்டில் தாழ்ந்த நேர்க்கணிய மட்டங்களில் தொடர்ந்துமிருந்தது. எனினும், 2025இன் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியானது 2026இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்டது. 2025இன் தொடக்கத்தில் பணவீக்கம் அதிகரிக்க தொடங்கியபோது, ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கத்தின் போக்கு மாதாமாதம் அதிகரித்து வந்தபோதிலும், 2026 பெப்புருவரியில் ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கத்தில் ஏற்பட்ட சிறிதளவு குறைவொன்றினால் இம்மிதமடைதல் பாரியளவில் தூண்டப்பட்டிருந்தது. வலு மற்றும் எரிபொருள் வகைகளின் பணச்சுருக்க அழுத்தங்கள் தொடர்ந்தும் தளர்வடைந்து, 2026இன் முதலாம் காலாண்டில் முதன்மைப் பணவீக்கத்திற்கான அதன் பங்களிப்பு நேர்க்கணியமாகத்

[5] ஊகங்கள் வழமையாக இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டண முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டு அல்லது தொடர்ச்சியான செலவு மீட்பு விலையிடலை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன. எனினும், அண்மைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டணச் சீராக்கங்கள் செலவினை முழுமையாகப் பிரதிபலிப்பதாக இருந்திருக்காது என்பதோடு இது 2025ஆம் ஆண்டிற்கான இலங்கை மின்சார சபையினால் பதிவுசெய்யப்பட்ட ஒட்டுமொத்த இழப்பில் ஓரளவு பிரதிபலிக்கின்றது.

அடையப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில், *பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் குறித்த அறிக்கைக்கு வழிவகுத்த* ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுழற்சியிலும் வலு விலைகள் மீதான ஊகங்களின் தொகுப்பினை பின்னிணைப்பு 1 வழங்குகின்றது.

திரும்பலடைந்தது. எனினும், முன்னைய காலாண்டுகளில் ஒப்பீட்டளவில் கணிசமானளவு காணப்பட்ட முதன்மைப் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் வெறியக் குடிவகையல்லா வகையின் சாதகமான பங்களிப்பானது 2026இன் முதலாம் காலாண்டில் குறிப்பிடத்தக்களவில் மிதமடைந்தமைக்கு பெரும்பாலும் குறிப்பாக, 2026 பெப்புருவரி மற்றும் மாச்சில் குறிப்பிட்ட உணவு வகைகளில் ஏற்பட்ட விலைக்குறைப்புக்கள் மற்றும் புள்ளவிபரத் தளத்தாக்கம் போன்றன முக்கியக் காரணமாக அமைந்தன. பணிகள் வகையின் பங்களிப்பு நேர்க்கணியமாகவும் ஒப்பீட்டளவில் உறுதியாகவும் காணப்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் தாழ்வான மையப் பணவீக்கச் சூழலொன்றுக்கு மத்தியில், ஒட்டுமொத்த விலை அதிகரிப்புக்கள் பெருமளவில் படிப்படியாக மெதுவடைந்து காணப்பட்டு, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2026இன் முதலாம் காலாண்டில் 2.0 சதவீதம் கொண்ட காலாண்டு பணவீக்கமொன்றைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்து, இதன்மூலம் 3.0 சதவீதத்திற்கு கீழே காணப்பட்டது.

வரைபடம் 1: காலாண்டு முதன்மைப் பணவீக்க வீதம் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100) ஆண்டிற்காண்டு, %)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2: முதன்மை மற்றும் மையப் பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2023 சனவரிக்கு முன்னைய தரவுகள் கொ.நு.வி.சுட்டெண் (2013=100)இன் அடிப்படையிலுள்ள வேளையில், 2023 சனவரியில் ஆரம்பிக்கின்ற தரவுகள் கொ.நு.வி.சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்துள்ளன.

வரைபடம் 3: முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண், 2021=100 ஆண்டிற்காண்டு, %)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2.2. இதேவேளை, மையப் பணவீக்கம் தாழ்ந்த நேர்க்கணிய மட்டங்களில் தொடர்ந்தும் காணப்பட்டு, 2026இன் முதலாம் காலாண்டில் 2.3 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. குறிப்பிட்ட உணவு விலைகளின் வீழ்ச்சி மற்றும் புள்ளிவிபரத் தளத்தாக்கம் போன்றவற்றினால் பாரியளவில் தூண்டப்பட்டு, 2025இன் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2026இன் முதலாம் காலாண்டில் மையப் பணவீக்கமும் சிறிதளவு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதிகளின் அதிகரிப்பு போன்ற ஏனைய குறிகாட்டிகள் சுட்டிக்காட்டுவதை விடவும் கேள்வியின் உத்வேகம் ஓரளவு மெதுவாக இருக்கக்கூடும் என மையப் பணவீக்கத்தின் மெதுவான வேகம் குறித்துக்காட்டுகின்றது.

2.3. நீண்ட காலமாக எதிர்க்கணியமாக காணப்பட்டிருந்த வலு மற்றும் எரிபொருள் பணவீக்கம், படிப்படியான உயர்வடைதலொன்றைப் பதிவுசெய்து நேர்க்கணியத்திற்கு திரும்பலடைந்ததோடு, இதன்மூலம் 2026இன் முதலாம் காலாண்டில் முதன்மைப் பணவீக்கத்திற்கு பங்களித்திருந்தது. குறிப்பிடத்தக்க விலை உயர்வு மாச்சு மாத இறுதியில் இடம்பெற்றதாலும், அதன் முழுமையான நேரடித் தாக்கம் 2026 ஏப்பிறலில் வெளிப்பட்டமையினாலும், 2026 மாச்சில் நடைமுறைப்படுத்தப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பு 2026இன் முதலாம் காலாண்டில் சிறிதளவு தாக்கமொன்றை மாத்திரம் ஏற்படுத்தியிருந்தது. இதற்கமைவாக, 2026ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் வலு மற்றும் எரிபொருள் பணவீக்கம் நேர்க்கணிய பாதையை அடைந்திருந்த போதிலும் குறைந்த மட்டங்களிலேயே காணப்பட்டது. பணிகள் பணவீக்கம் உறுதியாகக் காணப்பட்டு, ஒப்பீட்டளவில் கடந்த காலத்தில் அவதானிக்கப்பட்ட குறைந்தளவு தளம்பல் போக்கினை தொடர்ந்தது. அதேவேளை, முன்னைய காலப்பகுதிகளில் நேர்க்கணியமாகவும் உறுதியாகவும் காணப்பட்ட முதன்மைப் பணவீக்கத்திற்கான தளம்பல்மிக்க உணவுப் பணவீக்கத்தின் பங்களிப்பு, காய்கறிகள் மற்றும் தேங்காய்களின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளின் காரணமாக 2026 பெப்புருவரி மற்றும் மாச்சில் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது.

2.4. 2025இன் மூன்றாம் காலாண்டு மற்றும் நான்காம் காலாண்டிற்கு ஏற்புடைய 2026 மாச்சு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில், பல்வேறு முக்கிய ஊகங்களுக்கான திருத்தங்களுடன் இணைந்து மத்திய கிழக்குப் போருடன் தொடர்புடைய வலு விலை அதிகரிப்புக்களைப் பிரதிபலித்து, 2026 மாச்சில் நாணயக் கொள்கைச் சுற்றில் எறிவுசெய்யப்பட்ட பணவீக்கப் பாதை உயர்ந்தளவில் காணப்படுகின்றது. குறிப்பாக மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் போன்றவற்றுக்கான விலை அதிகரிப்புக்களுடன் தொடர்புபட்ட ஊகங்கள் முன்னைய அறிக்கையில் உள்ளவற்றுடன் ஒப்பிடுகையில் உயர்ந்தளவில் காணப்பட்டன. உலகளாவிய அபிவிருத்திகள் பற்றிய ஊகங்கள், உலகளாவிய எறிவுகளின் மாதிரி வலையமைப்பினை அடிப்படையாகக்கொண்டிருந்தன. முன்னைய அறிக்கையுடன் ஒப்பிடுகையில், உலகளாவிய வெளியீடு, நிதியியல் நிலைமைகள், எண்ணெய்

விலைகள் மற்றும் உலகளாவிய உணவு விலைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய ஊகங்களின் மாற்றங்களுடன் உலகளாவிய தோற்றப்பாடு திருத்தம்செய்யப்பட்டது. தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்கள், வர்த்தகத்துடன் தொடர்புபட்ட முறுகல்கள் மற்றும் கட்டுப்பாட்டு நிதியியல் நிலைமைகள் போன்றவற்றினால் உந்தப்பட்டு முக்கிய பொருளாதாரங்களிடையே பொருளாதார நடவடிக்கை மீதான தளம்பல்மிக்க உலகளாவிய நிலைமைகளின் தாக்கத்தினைப் பிரதிபலித்து, உலகளாவிய வளர்ச்சியானது முன்னர் எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க 2026இல் நலிவடைந்திருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. உயர்வடைந்த புவிசார் அரசியல் இடர்நேர்வுகளைப் பிரதிபலித்து, முன்னைய அறிக்கையுடன் ஒப்பிடுகையில் குறிப்பாக அண்மைக் காலத்தில் உலக எண்ணெய் விலைகளுக்கான பாதை குறிப்பிடத்தக்களவில் மேல்நோக்கி திருத்தம்செய்யப்பட்டது. உலகளாவிய உணவுப் பணவீக்கமானது 2026 மற்றும் 2027 காலப்பகுதியில் உயர்ந்தளவிலான போக்கிலிருக்குமென எறிவுசெய்யப்பட்டது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கை தளர்த்தலானது முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் தாமதமாகவிருக்குமென எதிர்பார்க்கப்பட்டு, நடுத்தர காலத்தில் உயர்ந்தளவிலான கொள்கை வீதப் பாதையொன்றை எடுத்துக்காட்டியது. 2026ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பி வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு அடிப்படையிலான 2026 தொடக்கம் உள்நாட்டு இறைத் துறையுடன் தொடர்புடைய ஊகங்கள் முன்னைய அறிக்கையிலிருந்து பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்பட்ட அதேவேளை, 2025 இற்கான அடையப்பட்ட இறைசார் தரவுகளை ஒருங்கிணைத்தது. ஒட்டுமொத்தத்தில், இத்திருத்தங்கள் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கப் பாதைக்கான மேல்நோக்கிய திருத்தமொன்றிற்குப் பங்களித்தன.

3. மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள்

3.1. **நாணயக் கொள்கையானது பணவீக்கத்தின் மீதான கேள்விப் பக்க அழுத்தங்களைத் தணிப்பதனை பிரதானமான நோக்காகக் கொண்டுள்ள வேளையில், மத்திய வங்கி நிரம்பல் பக்க அதிர்வுகளையும் உன்னிப்பாகக் கண்காணிப்பதுடன் அவை பணவீக்க எதிர்பார்க்கைகளைக் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கிற்குட்படுத்துமாயின் அல்லது கசிவுத்தாக்க விளைவுகளினூடாகப் பணவீக்கத் தோற்றப்பாட்டில் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு வழிவகுக்குமாயின் அதற்கான பதிலிறுப்புக்களை மேற்கொள்கின்றது.** இருப்பினும், இத்தகைய நீடித்த தாக்கங்களில்லாத பட்சத்தில், கொள்கை நடவடிக்கைகளின் ஊடுகடத்துகையானது காலதாமதத்துடன் இடம்பெறுவதைக் கருத்திற்கொள்கையில், குறுங்கால நிரம்பல் பக்க இடையூறுகளை நிவர்த்திசெய்வதில் நாணயக் கொள்கையானது குறைந்தளவில் செயற்திறன்மிக்கதாகக் காணப்படுகின்றது.

3.2. **2023 யூனில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றினைப் பின்பற்றியதிலிருந்து, கொள்கை வட்டி வீதங்கள், 2025 மேயில் 25 அடிப்படைப்**

புள்ளிகளைக் கொண்ட இறுதிக் குறைப்பு உள்ளடங்கலாக மொத்தமாக ஏறத்தாழ 8.00 சதவீதப் புள்ளிகளினால் குறைவடைந்துள்ளன. [6]

3.3. **மத்திய வங்கியானது 2026 மாச்சு மாத நாணயக் கொள்கைச் சுற்றில் ஓரிரவு கொள்கை வீதத்தினை 7.75 சதவீதத்தினைக் கொண்ட மட்டத்தில் பேணுவதற்குத் தீர்மானித்தது.** மத்திய கிழக்கில் இடம்பெற்றுவருகின்ற போரிலிருந்து உருவாகின்ற நிச்சயமற்றதன்மைகளுக்கான பிரத்தியேக கவனத்துடன், உள்நாட்டு மற்றும் உலகளாவிய பக்கங்கள் மீதான பரிணமித்துவருகின்ற அபிவிருத்திகள் மற்றும் தோற்றப்பாட்டினை கவனமாக பரிசீலனையிற்கொண்டதன் பின்னர் நாணயக் கொள்கைச் சபை இத்தீர்மானத்தினை மேற்கொண்டது. ஆண்டிறுதியில் டித்வா புயலினால் ஏற்பட்ட இடையூறுகளுக்கிடையிலும் பொருளாதாரமானது 2025 இல் 5 சதவீதம் கொண்ட வலுவான உண்மை வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2026இன் முற்பகுதியில் காணப்பட்டவாறான முன்னணிப் பொருளாதாரக் குறிகாட்டிகள் உத்வேகத்தின் தொடர்ச்சியொன்றை எடுத்துக்காட்டுகின்றன. வெளிநாட்டுத் துறையானது, உயர்ந்தளவிலான பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலா வருவாய்களுடன் இணைந்து இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் வலுவாக காணப்பட்ட ஏற்றுமதி வருவாய்களினால் துணையளிக்கப்பட்டு, 2026 முற்பகுதியில் வலுவானதாகக் காணப்பட்டது. படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் காணப்பட்ட போதிலும், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் போதியளவு மட்டமொன்றில் காணப்பட்டது. இருப்பினும், போர் நீடிக்குமாயின், எதிர்வருகின்ற காலப்பகுதியில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் மீது தற்போது நிலவுகின்ற மத்திய கிழக்குப் போர் தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும். இது இலங்கையின் வெளிநாட்டுத் துறைத் தோற்றப்பாட்டிற்குக் குறிப்பாக, வலு, சுற்றுலா, வர்த்தகம் மற்றும் பணவனுப்பல்சார் பாய்ச்சல்கள் என்பன ஊடாக இடர்நேர்வுகளினைத் தோற்றுவிக்கின்ற போதிலும் தாக்கத்தின் ஒட்டுமொத்த அளவானது நிச்சயமற்றதாகக் காணப்படுகின்றது. இலங்கை ரூபாவானது 2026இன் முற்பகுதியில் ஒப்பீட்டளவில் உறுதியாகக் காணப்பட்ட வேளையில், மத்திய கிழக்கு மோதலின் ஆரம்பத்தினைத் தொடர்ந்து பிராந்திய நாடுகளின் செலாவணி வீதங்களினைப் போன்று பெறுமானத்தேய்வு அழுத்தங்கள் அவதானிக்கப்பட்டன. இப்போட்டித்தன்மைமிக்க சவால்களுக்கு மத்தியிலும், 2026இன் முற்பகுதியில் தாழ்ந்த மட்டத்திலான பணவீக்கமானது உயர்ந்தளவிலான வலு விலைகள் மற்றும் பணவீக்கத்தின் மீதான அவற்றின் கசிவுத் தாக்கங்களுக்கு இடமளிப்பதற்கு பாரியளவிலான இடைவெளியினை வழங்குகின்றது.

3.4. **இச்சூழலில், பணவீக்கமானது இலக்கினை அண்மித்து உறுதியடையும் அதேவேளை பொருளாதாரமானது அதன் சாத்தியமான தன்மையினை அடைவதற்கு**

---

[6] தற்போதைய கொள்கை வட்டி வீதங்கள் வரலாற்று ரீதியிலான போக்குகளுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் தாழ்ந்தளவிலான மட்டங்களில் காணப்படுகின்றன. மேலும், நியதி ஒதுக்கு விகிதமானது 2023 ஓகத்தில் 2 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதுடன் அதிலிருந்து இத்தாழ்ந்தளவிலான மட்டத்திலேயே பேணப்பட்டு வருகின்றது.

ஆதரவளிப்பதனை உறுதிசெய்வதற்குப் பொருத்தமான கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மீது நாணயக் கொள்கைச் சபை கவனம்செலுத்துகிறது. மத்திய வங்கியானது எதிர்பார்க்கைகளை முகாமைசெய்வதற்கு முன்கூட்டியே தொடர்ச்சியாகத் தொடர்பூட்டுகின்ற அதேவேளை நாணயக்கொள்கையின் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தலினை உறுதிசெய்யும் வகையில் அதன் தொழிற்பாடுகளை சரியான நேரத்திலும் பொருத்தமான முறையிலும் நடாத்துகின்றது.

4. பணவீக்க இலக்கு எக்காலவரையறையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலப்பகுதி பற்றிய ஒரு மதிப்பீடு

4.1. **இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட தினம் வரை கிடைக்கப்பெற்ற அண்மைய உத்தியோகபூர்வ பணவீக்க எதிர்வுகூறலினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 2026 மாச்சு மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளிற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது 2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 5 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.** முன்னைய எதிர்வுகூறல் சுற்றுடன் ஒப்பிடுகையில், எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான எரிபொருள் விலைத் திருத்தங்கள், மின்சாரக் கட்டணங்களில் மேற்கொள்ளப்பட்ட மேல்நோக்கிய திருத்தம் மற்றும் உயர்ந்தளவிலான வலு மற்றும் போக்குவரத்து பணவீக்கத்திலிருந்தான கசிவுத்தாக்கங்கள் என்பவற்றினைப் பிரதிபலித்து, பணவீக்கமானது முன்னர் எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க துரிதமாக உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தின் எறிவுசெய்யப்பட்ட பாதையானது வரைபடம் 4இல் காணப்படுகின்ற பணவீக்க வீச்சு வரைபடத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. எறிவுகள் குறிப்பிட்ட சில ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால், அவை நிச்சயமற்றதன்மையுடன் உட்கிடையாக இணைந்துள்ளதுடன், இது வீச்சு வரைபடத்தில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. முதன்மைப் பணவீக்கமானது இலக்கை அடைந்து, இலக்கிலிருந்து ±2 சதவீதப் புள்ளிகளின் எல்லையினுள் காணப்படும் என குறிப்பிடுகின்ற மதிப்பீடானது எதிர்வுகூறல் பரவலின் சராசரிப் பாதையினை அடிப்படையாகக்கொண்டுள்ளது. வீச்சு வரைபடத்தின் அடிப்படையிலான எதிர்வுகூறல் பரவலினடிப்படையில், பணவீக்கமானது 2026இன் இரண்டாம் காலாண்டில் ±2 சதவீதப் புள்ளிகளின் எல்லையினுள் தொடர்ந்து காணப்படுவதற்கான நிகழ்தகவு ஏறத்தாழ 45 சதவீதமாக மதிப்பிடப்படுகின்றது. உயர்வடைந்த உலகளாவிய வலு மற்றும் போக்குவரத்து விலைகளுக்கு மத்தியில், பொருளாதாரத்தின் தற்போதைய மீட்சி, நாணயத் தளர்வடைதல் மற்றும் இலங்கை ரூபாவின் படிப்படியான பெறுமானத்தேய்வு என்பன முதன்மைப் பணவீக்கத்தினை இலக்கினை நோக்கி திரும்பலடைவதற்கு காரணமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அடிப்படைப் பணவீக்க அழுத்தங்களைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமும் முதன்மைப் பணவீக்க இலக்குடன் இசைந்துசெல்கின்ற மட்டமொன்றை நோக்கிப் படிப்படியாக அதிகரித்து, நடுத்தர காலத்தில் ஒப்பீட்டளவில்

உறுதியாகத் தொடர்ந்து காணப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், சாத்தியமான வலு மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விலைகளிலிருந்தான கசிவுத்தாக்கங்களும் மையப் பணவீக்கத்திற்கு பங்களித்து, ஒப்பீட்டளவில் வேகமான உத்வேகத்தை ஏற்படுத்தக்கூடும்.

4.2. **பணவீக்கமானது இலக்கினை அண்மித்த மட்டங்களை எட்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற மேற்குறித்துரைக்கப்பட்ட காலவரையறையானது 2026 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கக்கூடியதாகவிருந்த தரவுகள், ஊகங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் என்பவற்றின் நிபந்தனைக்குட்பட்டுக் காணப்படுகின்றது.** இவ்வெறிவுகள் உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சிப் பாதை, அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற இறைப் பாதை, பெடரல் நிதிய வீதத்தினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைமைகள் மற்றும் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மீதி உள்ளடங்கலாக வெளிநாட்டுத் துறையில் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகள் என்பன உள்ளடங்கலாக பல காரணிகள் மீது தங்கியிருக்கின்றன. இதற்கமைவாக, இவ்வூகங்களில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றமானது எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பெற்ற பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். குறிப்பாக, மத்திய கிழக்கு போருடன் தொடர்புடைய அபிவிருத்திகள் அத்துடன் வலு மற்றும் பண்ட விலைகள் உள்ளடங்கலாக உலகளாவிய விலைகளில் ஏற்பட்டுள்ள ஏதேனும் மாற்றங்கள் எறிவுசெய்யப்பட்ட பணவீக்க உத்வேகத்தை மாற்றக்கூடும்.

4.3. **எனவே, பல்வேறு காரணிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற பணவீக்க எறிவுகளின் அடைவிற்கு மேல்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன.** தீவிரமடைந்த புவிசார் அரசியல் பதற்றங்களானவை உலகளாவிய பண்டச் சந்தைகள், வலு விநியோகங்கள் மற்றும் கப்பற்பயண வழிகளை இடையூறுக்குட்படுத்தக்கூடும். இவ்வபிவிருத்திகள் உலகளாவிய எண்ணெய் விலைகள் மற்றும் கப்பற்பயண செலவுகளில் ஏற்கனவே அதிகரிப்புக்களுக்கு இட்டுச்சென்றுள்ளதுடன், உள்நாட்டு வலு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் என்பவற்றில் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் உயர்ந்தளவிலான அதிகரிப்புக்களுக்கும் அதேபோன்று வேளாண்மை உற்பத்தி மற்றும் உணவு விலைகளைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய உயர்ந்தளவிலான வளமாக்கி விலைகளுக்கு சாத்தியமானளவில் இட்டுச்செல்லக்கூடும். மேலும், இலங்கை ரூபாவின் உயர்ந்தளவிலான மட்டங்களிலான சாத்தியமான பெறுமானத்தேய்வு மற்றும் வலுவான கொடுகடன் வளர்ச்சியின் காலங்கடந்த தாக்கத்தினால் உந்தப்பட்டு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான கேள்வி அழுத்தங்கள் பணவீக்கத்தின் மீது மேலும் மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும். வேளாண்மை மற்றும் வலுத் துறைகளைப் பாதிக்கின்ற சாத்தியமான மீண்டும் மீண்டும் நிகழும் வானிலை நிகழ்வுகளும் உணவு மற்றும் வலு பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தத்தினை செலுத்தக்கூடும். அதேவேளை, பணவீக்க எறிவுகளின்

அடைவிற்கான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள், மையப் பணவீக்கத்தில் மிகவும் படிப்படியான மீட்சியொன்றுக்கு இட்டுச்செல்கின்ற எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க நலிவடைந்து காணப்படுகின்ற கேள்வி நிலைமைகளின் சாத்தியத்தன்மை மற்றும் உணவு விலைகளின் மீது அழுத்தத்தினை தளர்த்துவதற்கு உதவுகின்ற மேம்பட்ட வேளாண்மை உற்பத்தியின் ஏதேனும் சாத்தியத்தன்மை என்பவற்றை உள்ளடக்குகின்றது. மத்திய கிழக்குப் போரின் நிலையற்றதன்மையினைக் கருத்திற்கொண்டு, விலைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை மீதான தாக்கமானது நிச்சயமற்றதாகக் காணப்படுகின்றது. அத்தகைய அபிவிருத்திகள் எதிர்வரும் காலத்தில் நாணயக் கொள்கையை அளவமைப்பதில் நாணயக் கொள்கைச் சபையினால் உன்னிப்பாகக் கருத்தில் கொள்ளப்படும். அதேவேளை, மத்திய வங்கியின் பணவீக்க எறிவுகள் உள்நோக்கி வருகின்ற தகவல்களிற்கமைய தொடர்ச்சியாகச் சீராக்கப்படுமென்பதுடன் நாணயக் கொள்கையுடன் தொடர்புடைய தொடர்பூட்டல் வழிமுறைகள் ஊடாக பொதுமக்களுக்குத் தொடர்பூட்டப்படும்.

வரைபடம் 4: எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம் (காலாண்டு, கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)

மாச்சு மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட எறிவுகளின் அடிப்படையிலமைந்துள்ளது



மூலம்: மத்திய வங்கியின் அலுவலர் எறிவுகள்

§ *மத்திய வங்கிக்கும் நிதியமைச்சரிற்கும் இடையில் 2023 ஒத்தோபரில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கானது (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

* வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் 2026 மாச்சு மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைக்கப்பெறத்தக்க சகல தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.

வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நம்பிக்கை இடைவெளிகள் நடுத்தர காலத்தில் பணவீக்கம் தளம்பலடையக்கூடிய பெறுமதிகளுக்குள்ளான வீச்சுகளை எடுத்துக்காட்டுகின்றன. உதாரணமாக, தடிப்பான பச்சை நிறப்படுத்தப்பட்ட பகுதியானது 50 சதவீத நம்பிக்கை இடைவெளியினைப் பிரதிபலித்து, உண்மையான பணவீக்க விளைவு இவ்விடைவெளியினுள் அமையப்பெறுவதற்கான 50 சதவீத நிகழ்தகவினை எடுத்துக்காட்டுகின்றது. நம்பிக்கை இடைவெளிகள் நீண்ட காலத்தில் பணவீக்கத்தின் எதிர்வுகூறலின் அதிகரிக்கின்ற நிச்சயமின்மையினைக் காட்டுகின்றன.

மத்திய கிழக்கில் நிலவுகின்ற யுத்தத்தின் நிலையற்ற தன்மை அத்துடன் அதன் உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கை மீதான பரந்த வீச்சிலான கசிவுத்தாக்கங்கள் போன்றவற்றுக்கு மத்தியில், தற்போதைய பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடானது உயர்ந்தளவிலான நிச்சயமற்றதன்மைக்குட்பட்டதாக காணப்படுகின்றது. இதனடிப்படையில், அடிப்படை நிலைமைகளிலிருந்தான ஏதேனும் கணிசமானளவு மாற்றங்களும் இந்த எறிவுகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு விலகல்களுக்கு வழிவகுக்கக்கூடும்.

இணைப்பு

வரைபடம் 5: வகைப்பாட்டு ரீதியிலான முதன்மைப் பணவீக்கம் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: 2023 சனவரிக்கு முன்னைய தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணின் (2013=100) அடிப்படையிலமைந்துள்ள வேளையில் 2023 சனவரியிலிருந்து ஆரம்பிக்கின்ற தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்துள்ளன. கொ.நு.வி.சுட்டெண்ணின் (2021=100) அடிப்படையிலமைந்த அடிப்படை நிறைகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

இணைப்பு 1

பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்க விலகல் மீதான அறிக்கையில் **எடுத்துக்காட்டப்பட்டவாறு உண்மையான பெறுபேறுகளுடன் ஒப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் எறிவுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வலு விலை ஊகங்களின் தொகுப்பு**

நாணயக் கொள்கைச் சுற்றுக்களில் பயன்படுத்தப்படும் ஊகங்களானவை எறிவுகள் தயாரிக்கப்பட்ட நேரத்தில் கிடைக்கப்பெறுகின்ற தரவுகளைப் பயன்படுத்தி ஆக்கப்படுகின்றன. மின்சாரக் கட்டணங்களுடன் தொடர்புடைய ஊகங்கள், பொதுவாக இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கட்டண முன்மொழிவுகளை அல்லது செலவு மீட்பு விலையிடலின் தொடர்ச்சியின் அடிப்படையினை அடிப்படையாகக் கொண்டவை. உள்நாட்டு எரிபொருள் விலைகள் மீதான ஊகங்கள் உலகளாவிய எரிபொருள் விலை அபிவிருத்திகள் மற்றும் செலாவணி வீத அசைவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை. உலகளாவிய எரிபொருள் விலைகளுக்கான எறிவுகள், உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ள அதேவேளை, இவ்வெறிவுகள் பற்றிய வலுவானதன்மையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் உலக பொருளாதார தோற்றப்பாடு உள்ளடங்கலாக ஏனைய கிடைக்கப்பெறுகின்ற மூலங்களுக்கெதிராக பரீட்சிக்கப்படுகின்றன.

பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் மீதான அறிக்கையின் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: **2024இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகள்**		
(இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகள் **2024 நவெம்பர் நாணயக் கொள்கைச் சுற்றை** அடிப்படையாகக் கொண்டிருந்தன)	**ஊகம்**	**உண்மையான நிலைமை**
	மின்சாரக் கட்டணம்	
	ஊடனடியாக முன்னோக்கிய மாதங்களில்[7] மாற்றம் எதுவும் ஊகிக்கப்படவில்லை.	2025 சனவரியில் மின்சாரக் கட்டணம் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டது.
	எரிபொருள் விலைகள்	
	பெற்றோல்[8] விலைகள் ஏறத்தாழ 1-2 மாதகாலத்தில் வீழ்ச்சியடையுமெனவும் பின்னர் ஏறத்தாழ 5-6 மாதகாலத்தில் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்கப்பட்டது.	உடனடி மாதத்தில் பெற்றோல் விலைகள் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் குறைவான அளவில் வீழ்ச்சியடைந்தன். பெற்றோல் விலைகள் ஏறத்தாழ 5-6 மாதகாலத்தில் மேலும் கீழ்நோக்கி திருத்தம் செய்யப்பட்டன.
	டீசல்[9] விலைகள் ஏறத்தாழ 5-6 மாதகாலத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.	டீசல் விலைகள் உடனடி மாதத்தில் சிறிதளவு அதிகரித்தன.
	நடுத்தரகாலத்தில், எரிபொருள் விலைகள் மேல்நோக்கிய பாதையைப் பின்தொடர்ந்து செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது.	ஊகிக்கப்பட்டவாறு மீளவும் அதிகரித்துச் செல்லும் போக்காகத் திரும்பலடையாது உலகளாவிய எரிபொருள் விலைகளில் வீழ்ச்சியானது தொடர்ந்தும் வீழ்ச்சியடையும் போக்கில் காணப்பட்டது.
	திரவப் பெற்றோலிய எரிவாயு	
	முன்னோக்கிய உடனடி மாதங்களில் விலைகளில் சிறிய அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டது.	லிற்றோ விலையில் மாற்றம் எதுவுமில்லை. ஏறத்தாழ 6 மாதகாலத்தில்[10] லாப் விலை அதிகரித்தது.

[7] நேர காலப்பகுதியானது நேரொத்த எதிர்வுகூறல் சுற்று இடம்பெற்ற மாதத்திலிருந்து தொடங்கி அளவிடப்படுகின்றது.
[8] பெற்றோல் (ஒக்டேன் 92)
[9] ஓட்டோ டீசல்
[10] லிற்றோ கேஸ் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையில் உயர்வான பங்கிற்கு வகைகூறுகின்றது.

<table>
<tr><td colspan="3">பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் மீதான அறிக்கையின் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2024இன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகள்</td></tr>
<tr><td rowspan="11">(இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகள் 2025 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன)</td><td>ஊகம்</td><td>உண்மையான நிலைமை</td></tr>
<tr><td colspan="2">மின்சாரக் கட்டணம்</td></tr>
<tr><td>2025 சனவரியின் மின்சாரக் கட்டணக் குறைப்பு எறிவுகளுக்குள் கூட்டிணைக்கப்பட்டன.
முன்னோக்கிய உடனடி மாதங்களில் மாற்றமெதுவும் ஊகிக்கப்பட்டிருக்கவில்லை.</td><td>மின்சாரக் கட்டணம் 2025 யூனில் (2025 இரண்டாம் காலாண்டின் இறுதி) மேல்நோக்கி திருத்தம் செய்யப்பட்டது.</td></tr>
<tr><td colspan="2">எரிபொருள் விலைகள்</td></tr>
<tr><td>பெற்றோல் விலைகள் முன்னோக்கிய உடனடி மாதங்களில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>பெற்றோல் விலைகள் ஏறத்தாழ 4-5 மாத காலத்தில் வீழ்ச்சியடைந்தன.</td></tr>
<tr><td>டீசல் விலைகள் முன்னோக்கிய உடனடி மாதங்களில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>ஏறத்தாழ 5 மாத காலத்தில் டீசல் விலைகள் வீழ்ச்சியடைந்தன.</td></tr>
<tr><td>நடுத்தரகாலத்தில் எரிபொருள் விலைகள் சிறிதளவு குறைவடைகின்ற பாதையைப் பின்தொடர்ந்து செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>உலகளாவிய எரிபொருள் விலைகள் 2025இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.</td></tr>
<tr><td colspan="2">திரவப் பெற்றோலிய எரிவாயு</td></tr>
<tr><td>ஏறத்தாழ 3 மாதங்களில் விலைகளில் சிறிதளவு அதிகரித்து, அதனைத்தொடர்ந்து ஏறத்தாழ 4 மாதங்களில் மிகக்குறைந்தளவில் விலைகள் குறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>லாப் விலை ஏறத்தாழ 4 மாத காலத்தில் அதிகரித்தது.</td></tr>
</table>

<table>
<tr><td colspan="3">பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் மீதான அறிக்கையின் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2024இன் நான்காம் மற்றும் 2025இன் முதலாம் காலாண்டுகள்</td></tr>
<tr><td rowspan="10">(இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகள் 2025 மே நாணயக் கொள்கைச் சுற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன)</td><td>ஊகம்</td><td>உண்மையான நிலைமை</td></tr>
<tr><td colspan="2">மின்சாரக் கட்டணம்</td></tr>
<tr><td>2025 யூனில் மின்சாரக் கட்டண அதிகரிப்பொன்று ஊகிக்கப்பட்டது.</td><td>மின்சாரக் கட்டணம் ஊகிக்கப்பட்டதையும் விட சிறிதளவு குறைவான அளவினால் 2025 யூனில் மேல்நோக்கி திருத்தம்செய்யப்பட்டது.</td></tr>
<tr><td colspan="2">எரிபொருள் விலைகள்</td></tr>
<tr><td>பெற்றோல் விலைகள் ஏறத்தாழ 2-3 மாதகாலத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>பெற்றோல் விலைகள் 3 மாதகாலத்தில் அதிகரிக்கப்பட்டன ஆயினும் 5 மாதகாலத்தில் வீழ்ச்சியடைந்தன.</td></tr>
<tr><td>டீசல் விலைகள் ஏறத்தாழ 2 மாதகாலத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>டீசல் விலைகள் 3 மாதகாலத்தில் அதிகரிக்கப்பட்டன ஆயினும் 5-6 மாதகாலத்தில் வீழ்ச்சியடைந்தன.</td></tr>
<tr><td>நடுத்தரகாலத்தில் எரிபொருள் விலைகள் மேல்நோக்கிய பாதையைப் பின்தொடர்ந்து செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td></td></tr>
<tr><td colspan="2">திரவப் பெற்றோலிய எரிவாயு</td></tr>
<tr><td>திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளில் சிறிதளவு வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டது.</td><td>விலைகளில் மாற்றமெதுவும் அவதானிக்கப்படவில்லை.</td></tr>
</table>

<table>
<tr><td colspan="3">பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் மீதான அறிக்கையின் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகள்</td></tr>
<tr><td rowspan="11">(இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகள் 2025 யூலை நாணயக் கொள்கைச் சுற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன)</td><td>ஊகம்</td><td>உண்மையான நிலைமை</td></tr>
<tr><td colspan="2">மின்சாரக் கட்டணம்</td></tr>
<tr><td>முன்னோக்கிய உடனடி மாதங்களில் மாற்றம் எதுவும் ஊகிக்கப்படவில்லை.</td><td>கட்டணங்களில் மாற்றமெதுவும் அவதானிக்கப்படவில்லை.</td></tr>
<tr><td colspan="2">எரிபொருள் விலைகள்</td></tr>
<tr><td>பெற்றோல் விலைகள் ஏறத்தாழ 2-3 மாதகாலத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>பெற்றோல் விலைகள் 3 மாதகாலத்திலும் பின்னர் 5 மாதகாலத்தில் மீண்டும் வீழ்ச்சியடைந்தன.</td></tr>
<tr><td>டீசல் விலைகள் ஏறத்தாழ 2-3 மாதகாலத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>டீசல் விலைகள் 3-4 மாதகாலத்தில் வீழ்ச்சியடைந்தன.</td></tr>
<tr><td>நடுத்தரகாலத்தில் எரிபொருள் விலைகள் மேல்நோக்கிய பாதையைப் பின்தொடர்ந்து செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td></td></tr>
<tr><td colspan="2">திரவப் பெற்றோலிய எரிவாயு</td></tr>
<tr><td>திரவப் பெற்றோலிய எரிவாயு விலைகளில் சிறிதளவு வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டது.</td><td>விலைகளில் மாற்றமெதுவும் அவதானிக்கப்படவில்லை.</td></tr>
</table>

<table>
<tr><td colspan="3">பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் மீதான அறிக்கையின் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகள்</td></tr>
<tr><td rowspan="10">(இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகள் 2025 நவெம்பர் நாணயக் கொள்கைச் சுற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன)</td><td>ஊகம்</td><td>உண்மையான நிலைமை</td></tr>
<tr><td colspan="2">மின்சாரக் கட்டணம்</td></tr>
<tr><td>மின்சாரக் கட்டண அதிகரிப்பொன்று 2026 சனவரியில் ஊகிக்கப்பட்டது.</td><td>2026 சனவரியில் கட்டணத்தில் மாற்றமெதுவும் அவதானிக்கப்படவில்லை. ஆயினும், 2026 ஏப்பிறலில் கட்டணங்கள் மேல்நோக்கி திருத்தம் செய்யப்பட்டன.</td></tr>
<tr><td colspan="2">எரிபொருள் விலைகள்</td></tr>
<tr><td>பெற்றோல் விலைகள் ஏறத்தாழ 3 மாதகாலத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>பெற்றோல் விலைகள் ஏறத்தாழ 4 மாதகாலத்தில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. ஆயினும் 5-6 மாதகாலத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.</td></tr>
<tr><td>டீசல் விலைகள் ஏறத்தாழ 2-3 மாதகாலத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>டீசல் விலைகள் ஏறத்தாழ 3-4 மாதகாலத்தில் சிறிதளவு தளம்பலடைந்தன. ஆயினும் 5-6 மாதகாலத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.</td></tr>
<tr><td>நடுத்தரகாலத்தில் எரிபொருள் விலைகள் மேல்நோக்கிய பாதையில் பின்தொடர்ந்து செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td></td></tr>
<tr><td colspan="2">திரவப் பெற்றோலிய எரிவாயு</td></tr>
<tr><td>விலைகளில் மாற்றமெதுவும் எதிர்பார்க்கப்படவில்லை.</td><td>3-6 மாதகாலத்தில் விலைகள் அதிகரித்தன.</td></tr>
</table>

<table>
<tr><td colspan="3">பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் மீதான அறிக்கையின் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகள்</td></tr>
<tr><td rowspan="11">(இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகள் 2026 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன)</td><td>ஊகம்</td><td>உண்மையான நிலைமை (2026 மே ஆரம்பம் வரை)</td></tr>
<tr><td colspan="2">மின்சாரக் கட்டணம்</td></tr>
<tr><td>முன்னோக்கிய உடனடி மாதங்களில் கட்டணத்தில் மாற்றமெதுவும் ஊகிக்கப்படவில்லை</td><td>2026 ஏப்பிறல் கட்டணங்கள் மேல்நோக்கி திருத்தம் செய்யப்பட்டன.</td></tr>
<tr><td colspan="2">எரிபொருள் விலைகள்</td></tr>
<tr><td>பெற்றோல் விலைகள் உடனடி மாதத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>பெற்றோல் விலைகள் உடனடி மாதத்தில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது ஆயினும் ஏறத்தாழ 3 மற்றும் 5 மாதங்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.</td></tr>
<tr><td>டீசல் விலைகள் உடனடி மாதத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td>டீசல் விலைகள் உடனடி மாதத்தில் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது ஆயினும் ஏறத்தாழ 3 மற்றும் 5 மாதங்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.</td></tr>
<tr><td>நடுத்தரகாலத்தில் எரிபொருள் விலைகள் மேல்நோக்கிய பாதையைப் பின்தொடர்ந்து செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td></td></tr>
<tr><td colspan="2">திரவப் பெற்றோலிய எரிவாயு</td></tr>
<tr><td>விலைகளில் மாற்றமெதுவும் எதிர்பார்க்கப்படவில்லை</td><td>உடனடி மாதங்களில் விலைகள் அதிகரித்தன.</td></tr>
</table>

<table>
<tr><td colspan="3">பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கத்தின் விலகல் மீதான அறிக்கையின் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதி: 2025இன் நான்காம் மற்றும் 2026இன் முதலாம் காலாண்டுகள்</td></tr>
<tr><td rowspan="11">(இவ்வறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட எறிவுகள் 2026 மாச்சு நாணயக் கொள்கைச் சுற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன)</td><td>ஊகம்</td><td>உண்மையான நிலைமை (2026 மே ஆரம்பம் வரை)</td></tr>
<tr><td colspan="2">மின்சாரக் கட்டணம்</td></tr>
<tr><td>2026 ஏப்பிறலில் கட்டணங்களில் மேல்நோக்கிய திருத்தம் ஊகிக்கப்பட்டது.</td><td>எதிர்பார்க்கப்பட்டதையும் விட குறைவான மேல்நோக்கிய மின்சாரக் கட்டணத் திருத்தம் 2026 ஏப்பிறலில் அவதானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td colspan="2">எரிபொருள் விலைகள்</td></tr>
<tr><td>பெற்றோல் விலைகள் ஏறத்தாழ 3 மாதங்களில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டன.</td><td>பெற்றோல் விலைகள் 3 மாதகாலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட குறைவான அளவினால் அதிகரித்தன.</td></tr>
<tr><td>டீசல் விலைகள் ஏறத்தாழ 3 மாதங்களில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டன.</td><td>டீசல் விலைகள் 3 மாதகாலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட குறைவான அளவினால் அதிகரித்தன.</td></tr>
<tr><td>நடுத்தரகாலத்தில் எரிபொருள் விலைகள் மேல்நோக்கிய பாதையில் பின்தொடர்ந்து செல்லுமென எதிர்பார்க்கப்பட்டது.</td><td></td></tr>
<tr><td colspan="2">திரவப் பெற்றோலிய எரிவாயு</td></tr>
<tr><td>எரிவாயு விலைகள் உடனடி மாதத்தில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டன.</td><td>உடனடி மாதங்களில் விலையில் எதிர்பார்க்கப்பட்டதையும் விட உயர்வான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.</td></tr>
</table>